9

# இயேசுவுக்குப் பிடித்த பிரசங்கியார்

இயேசுவானவருக்குப்பிடித்தமான ஒரு பிரசங்கியார் இருந்தார் என்பது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். இயேசுவுக்குப் பிடித்த பிரசங்கியார் ஒரு லுத்தரன், மெதாடிஸ்ட், பெந்தெகொஸ்தே, ஆங்கிலிக்கன் அல்லது பிரஸ்பிட்டீரியன் சபையைச் சேர்ந்தவர் அல்ல என்பது உங்களுக்கு இன்னுமதிகமாக வியப்பை அளிக்கலாம். அவரே யோவான்ஸ்நானன்! அவரைக் குறித்து இயேசுவானவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்:

> ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை [மத். 11:11அ].

எல்லோரும் ‘‘ஸ்திரீகளிடத்திலே’’ பிறந்தவர்களாக இருக்கிறபடியால், இயேசுவின் மதிப்பீட்டின்படி யோவான்ஸ்நானனே இதுவரை வாழ்ந்தவர்களிலேயே மேன்மையான மனிதனாக இருக்க வேண்டும். இயேசு ஏன் இப்படிச் சொன்னார் என்பதற்கான காரணத்தை நம்மால் யூகிக்க மட்டுமே முடியும். யோவான்ஸ்நானனின் ஆவிக்குரிய பண்புகளின் காரணமாகவே இயேசு அவரை அதிகமாக மதித்தார் என்பது தெளிவாகும். அப்படியிருக்குமானால், நாம் இந்தக் குணாதிசயங்களை ஆய்வுசெய்து அவைகளைப் பின்பற்றுவது ஞானமுள்ள காரியமாகும். யோவான்ஸ்நானனிடம் குறைந்தபட்சமாக ஏழு பாராட்டப்பட வேண்டிய ஆவிக்குரிய பண்புகள் காணப்படுவதை நான் கவனித்திருக்கிறேன். யோவான்ஸ்நானின் ஊழியம் ஒரு சுவிசேஷனின் ஊழியமாக இருந்தாலும், இந்த ஏழு ஆவிக்குரிய பண்புகளும் சுவிசேஷத்துக்காக ஊழியம் செய்யும் எல்லோரிடமும் காணப்பட வேண்டும். இவைகளில் முதல் பண்பைக் குறித்து இப்போது நாம் பார்ப்போம்.

### யோவான்ஸ்நானனின் முதல் பண்பு

> எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்டபொழுது, அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும்: அல்ல என்றான். அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உங்களைக் குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான் (யோவான் 1:19–23).

யோவான்ஸ்நானன் தன் அழைப்பை அறிந்து அதன்படி செயல்பட்டார்.

ஊழியர்கள் தங்கள் அழைப்பை அறிந்து, அதன்படி செயல்படுவது மிகவும் முக்கியமானதாகும். நீங்கள் ஒரு சுவிசேஷகராக இருப்பீர்களானால் போதகராக முயலக் கூடாது. நீங்கள் ஒரு உபதேசியாராக இருப்பீர்களானால், ஒரு தீர்க்கதரிசியாக ஆக முயலக் கூடாது. இல்லாவிட்டால் நீங்கள மனச்சோர்வையே அடைவீர்கள்.

உங்கள் அழைப்பை நீங்கள் அறிவது எப்படி? முதலாவதாக, உங்களை அழைத்த ஆண்டவரைத் தேடுவதின்மூலம். இரண்டாவதாக, உங்கள் வரங்களை ஆய்வுசெய்வதின்மூலம் உங்கள் அழைப்பை அறிந்துகொள்ளலாம். தேவன் ஒரு சுவிசேஷகனாக இருக்கும்படி உங்களை அழைத்திருப்பார் என்றால், அதற்காக அவர் உங்களை ஆயத்தப்படுத்துவார். மூன்றாவதாக, உங்கள் வரங்களைக் கவனிக்கும் மற்றவர்கள் கொடுக்கும் உறுதிப்பாட்டின் மூலமாக உங்கள் அழைப்பை அறிந்துகொள்ளலாம்.

உங்கள் அழைப்பைக் குறித்த நிச்சயத்தை அறியும்போது நீங்கள் எதுவும் உங்களுக்கு இடையூறாக இருக்க அனுமதியாமல், உங்கள் அழைப்புக்கடுத்தவைகளை முழு இருதயத்தோடு நாட வேண்டும். பலர் தேவன் அவர்கள் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதைச் செய்யாமல் தேவன் அதைச் செய்வார் என்று காத்திருக்கிறார்கள். தேவனே பேழையைக் கட்ட வேண்டும் என்று நோவா காத்திருக்கவில்லை!





ஊழியம் என்றால் வேலைசெய்ய வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. உங்கள் அழைப்பை நீங்கள் நிறைவேற்றுவதைத் தடுக்கச் சாத்தான் கண்டிப்பாக முயலுவான். ஆனால் நீங்கள் அவனை எதிர்த்துநின்று, விசுவாசத்தோடு முன்னேற வேண்டும். யோர்தானின் அருகே யோவான்ஸ்நானன் முதன்முதலாகப் பிரசங்கம் செய்த *முதல் நாளைக்* குறித்து வேதாகமத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் துவக்கத்தில் அதிகமானவர்கள் அவருடைய பேச்சைக் கேட்கும்படி கூடிவந்திருக்க முடியாது. மக்கள் அவரைக் கேலிசெய்து துன்புறுத்தியிருக்கலாம். ஆனால் இது அவர் செயல்படுவதை நிறுத்தவில்லை. தன்னை ஊழியத்துக்கு அழைத்த தனது தேவனைப் பிரியப்படுத்த வேண்டும் என்பதே அவருடைய ஒரே நோக்கமாக இருந்தது. இறுதியில் அவர் வெற்றிபெற்றார்.

நாம் பின்பற்ற வேண்டிய யோவான்ஸ்நானனின் முதல் பண்பு இதுவாகும்: யோவான் தனது அழைப்பை அறிந்து அதன்படி செயல்பட்டார்.

### யோவான்ஸ்நானனின் இரண்டாவது பண்பு

> அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான் (மத். 3:1–2).

இயேசுவானவர் யோவான்ஸ்நானின் எளிய பிரசங்கத்துக்கு அதிகமான ஒப்புதலளித்தார் என்று தெரிகிறது. ஏனென்றால் அவரும் தாம் சென்ற இடங்களிலெல்லாம் இதே செய்தியையே பிரசங்கித்தார் (பார்க்க, மத். 4:17). யோவான்ஸ்நானன் மனந்திரும்பும்படி, பாவ வாழ்க்கையை விட்டுவிட்டு, நீதியின் வாழ்க்கைக்குத் திரும்பும்படி மக்களை அழைத்தார். மனந்திரும்புதலோடுகூட தேவனுடனான உறவு துவங்குகிறது என்பதையும் மனந்திரும்பாதவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

இப்போது பல நவீன சுவிசேஷகர்கள் செய்வதுபோல யோவான்ஸ்நானன் தேவனுடைய அன்பைக் குறித்து ஒருபோதும் குறிப்பிடவில்லை. மக்களின் ''தேவைகளைக்'' குறித்துப் பேசி அவர்கள் ''இயேசுவை ஏற்றுக்கொள்ளும்'' ஒரு ஜெபத்தை ஏறெடுக்கும்படி அவர்களைக் கவர்ந்திழுத்து, ''பரிபூரணமான வாழ்க்கை'' வாழும் அனுபவத்தைத் துவங்கும்படி சொல்லும் யுக்தியை யோவான்ஸ்நானன் கையாளவில்லை. மக்கள் தாங்கள் அடிப்படையில் நல்லவர்கள் என்றும், தங்கள் இரட்சிப்பானது கிரியைகளைச் சார்ந்திருக்கவில்லை என்பதை உணரும்போது தேவன் அவர்களைப் பரலோகத்துக்குக் கொண்டு செல்லுவார் என்று நம்ப வைக்கவும் யோவான்ஸ்நானன் முயலவில்லை.

மாறாக, தேவன் அவர்களை எப்படிக் கண்டாரோ அப்படியே தானும் அவர்களைக் கண்டார் – தங்கள் பாவங்களின் நித்திய விளைவாக அபாயத்தை எதிர்நோக்கியிருக்கும் கலகக்காரர்களாக அவர்களைக் கண்டார். வரவிருக்கும் கோபாக்கினையைக் குறித்து அவர் எச்சரித்தார். அவர்கள் தங்கள் இருதயத்தையும் செயல்களையும் மாற்றிக்கொள்ளா விட்டால் கண்டிப்பாக அழிவைச் சந்திப்பார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தினார்.

சீஷர்களை உருவாக்கும் ஒவ்வொரு ஊழியரும் பின்பற்றும்படி யோவான்ஸ்நானனிடம் காணப்பட்ட இரண்டாவது பண்பு: *தேவ னோடுள்ள உறவில் மனந்திரும்புதலே முதல் படி என்று யோவான் ஸ்நானன் பிரசங்கித்தார்.*

### யோவான்ஸ்நானின் மூன்றாவது பண்பு

> இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டிருந் தான்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது [மத். 3:4].

இன்றைய ''வளமைகுறித்துப் போதிக்கும் பிரசங்கியாருக்கு'' யோவான்ஸ்நானன் ஒருவிதத்திலும் ஒத்துப்போகவில்லை. யோவான் ஸ்நானன் வெற்றிபெற்ற ஒருவனைப்போல ஆடையணியாதபடியால் அவரை ஒருபோதும் தங்கள் பீடத்தில் ஏற அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் யோவானோ தேவனுடைய மனிதனாக இருந்தார். அவர் உலகப்பிரகாரமான பொக்கிஷங்களை நாடுவதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. தனது வெளித்தோற்றத்தைக் கொண்டு மக்களைக் கவர்ந்திழுக்கவும் முயலவில்லை. தேவன் இருதயத்தையே பார்க்கிறார் என்பதை அவர் அறிந்திருந்தார். அவருடைய வாழ்க்கை முறை எவருக்கும் தடைக்கல்லாக இருக்கவில்லை. ஏனென்றால் அவருடைய செயல்நோக்கம் பணம் அல்ல என்பதை அவர்களால் தெளிவாகக் காண முடிந்தது. ஆனால் இன்று உலகெங்கிலும் காணப்படும் பல நவீன ஊழியர்கள் இதற்கு எவ்வளவு முரண்பாடான வர்களாகக் காணப்படுகிறார்கள்! அவர்கள் அடிப்படையில் தனிப்பட்ட ஆதாயத்துக்காகவே சுவிசேஷத்தைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவைத் தவறாகப் பிரதிநித்துவம் செய்யும்போது அது கிறிஸ்து வுக்காகச் செய்யப்படும் ஊழியத்தை அதிகமாகப் பாதிக்கிறது.

யோவான்ஸ்நானனைத் தமக்குப் பிடித்தமான பிரசங்கியாராக இயேசுவானவர் ஏற்றுக்கொள்ளும்படி செய்த அவருடைய மூன்றாவது பண்பு இதுவாகும்: *யோவான்ஸ்நானன் மிகவும் எளிமையான முறையில் வாழ்ந்தார்.*





### யோவான்ஸ்நானனின் நான்காவது பண்பு

> அவன், தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டுவந்த திரளான ஜனங்களை நோக்கி: விரியன்பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் [லூக்கா 3:7–8].

யோவான்ஸ்நானனின் ஊழியம் இன்னுமதிகமான பேர்களைத் தொடும்படி வளர்ச்சியடைந்தபோது, அவர் தனது செய்தியை மாற்றிக் கொள்ளவில்லை. ஞானஸ்நானம் பெறுவது பிரபலமான காரியமாக ஆகிவிட்டிருந்தபடியால், யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் எடுக்க வரும் மக்களின் செயல்நோக்கத்தைச் சந்தேகித்தார். வேதபாரகரும் பரிசேயரும்கூட யோர்தானுக்குச் சென்றார்கள் [பார்க்க, மத். 3:7]. பலர் கூட்டத்தினால் இழுக்கப்பட்டு இப்படி வருகிறார்களோ என்று அவர் அச்சப்பட்டார். எனவே அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது என்பதற்காக அவர் அதிகமான எச்சரிப்பைக் கொடுத்தார். ஞானஸ்நானம் எடுப்பது தங்களை இரட்சிக்கிறது என்றும் மனந்திரும்புதலை வெறுமனே அறிக்கையிடுவது தங்களை நரகத்திலிருந்து காக்கிறது என்றும் எவரும் நினைத்துக்கொள்ளக் கூடாது என்பதில் அவர் கவனமாக இருந்தார். மெய்யான மனந்திரும்புதல் கீழ்ப்படிதலின் கனியைக் கொண்டுவர வேண்டும் என்று அவர் எச்சரித்தார்.

யூதர்கள் தாங்கள் ஆபிரகாமின் வழியில் வந்தபடியால் இரட்சிக்கப் பட்டிருப்பதாக நினைத்துக்கொள்ளுவது தவறு என்றும் அவர் எச்சரிப்புக் கொடுத்தார்.

யோவான்ஸ்நானனின் பாராட்டுக்குரிய நான்காவது பண்பு இதுவாகும்: *சத்தியத்தைச் செல்லுமளவுக்கு அவர் மக்களிடம் அன்பு காட்டினார். அவர் ஒருபோதும் மனந்திரும்பாத, பரிசுத்தமில்லாத நபரிடம் அவன் பரலோகத்துக்குப் போகிறான் என்ற நிச்சயத்தைக் கொடுக்கவில்லை.*

### யோவான்ஸ்நானனின் ஐந்தாவது பண்பு

> இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது; ஆகையால், நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே

> போடப்படும்... தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான் [மத். 3:10, 12].

நரகத்தைக் குறித்துச் சொல்ல யோவான்ஸ்நானன் ஒருபோதும் பயப்படவில்லை. இன்று தேவனுடைய ராஜ்யத்துக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதைவிட, மக்கள் நடுவில் பெயரெடுக்க வேண்டும் என்று விரும்பும் பல பிரசங்கிமார்கள் நரகத்தைப் பற்றிக் குறிப்பிடுவதே யில்லை. இயேசுவானவரின் மலைப்பிரசங்கத்தில் காணப்பட்ட அதே கருப்பொருளை யோவான்ஸ்நானனும் அறிவிக்கத் தவறவில்லை – பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள். நல்ல கனிகொடாதவர்கள் எல்லோரும் அக்கினியில் போடப்படுவார்கள்.

இன்று யோவான்ஸ்நானன் உயிரோடு இருப்பாரென்றால், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலர் அவரை ‘‘நரகத்தைக் குறித்துப் போதிப்பவர்’’, ‘‘அழிவைக்குறித்துப் போதிப்பவர்’’, ‘‘தேடுபவர்களைக் குறித்த உணர்வில்லாதவர்’’, ‘‘எதிர்மறையானவர்’’. ‘‘குற்றந்தீர்க்கிறவர்’’. ‘‘பிரமாணவாதி’’ அல்லது ‘‘சுயநீதியுள்ளவர்’’ என்றெல்லாம் சொல்லி அவரைப் புறக்கணித்திருப்பார்கள். என்றாலும் யோவான்ஸ்நானன் இயேசுவுக்குப் பிடித்த பிரசங்கியாராக இருந்தார். *யோவான்ஸ்நானன் நரகத்தைக் குறித்துப் பேசினார், எப்படிப்பட்ட மக்கள் அங்கே செல்லுவார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார்.*

## யோவான்ஸ்நானனின் ஆறாவது பண்பு

யோவான்ஸ்நானன் தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டு, திரளான மக்களின் மத்தியில் பிரபலமானவராக இருந்தபோதிலும், இயேசுவோடு ஒப்பிடும்போது தன்னை ஒன்றுமில்லாதவராக உணர்ந்தார். அவர் எப்போதுமே தனது ஆண்டவரை உயர்த்தினார்:

> மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் [மத். 3:11].

தற்போதைய இறுமாப்புடைய ‘‘ஊழியர்களோடு’’ ஒப்பிடும்போது யோவான்ஸ்நானன் எவ்வளவு முரண்பாடானவராக இருக்கிறார்! அவர்களுடைய பலவண்ணப் பத்திரிகையில் பக்கத்துக்குப் பக்கம் அவர்களுடைய வண்ணப்படங்களைக் காணலாம். இயேசுவானவரைப் பற்றி அதில் அதிகமாகக் குறிப்பிடப்படுவதில்லை. சபை மேடைகளில் அவர்கள் மயில்களைப்போல நடமாடி, தங்களைப் பின்பற்றுகிறவர்களின் பார்வையில் தங்களை உயர்த்திக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தொட முடியாதவர்களாகவும், எட்ட முடியாதவர்களாகவும் தங்களைத் தாங்களே முக்கியமானவர்களாகக் காட்டிக்கொள்ளுகிறார்கள். சிலர் தேவதூதர்களிடமும் தேவனிடமும் கட்டளையிடுகிறார்கள்! ஆனால் யோவான்ஸ்நானனோ தான் இயேசுவின் பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கும் பாத்திரன் அல்ல என்று சொல்லியிருக்கிறார். பாதரட்சைகளைச் சுமப்பது எல்லோரையும்விடக் கீழான அடிமையின் வேலையாகும். இயேசுவானவர் தம்மிடம் ஞானஸ்நானம் பெற வந்தபோது, இவர் அதைத் தடுத்தார். இயேசுவே கிறிஸ்து என்பதை அவர் உணர்ந்தபோது, எல்லோருக்கும் அவரைச் சுட்டிக்காட்டி, ‘‘இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி’’ என்று அறிக்கையிட்டார் [யோவான் 1:29]. ‘‘அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்’’ [யோவான் 3:30] என்பது யோவான்ஸ்நானனின் தாழ்மையான குறிக்கோளாகும்.

இயேசுவுக்குப் பிடித்த பிரசங்கியாராக ஆகும்படி யோவான்ஸ்நானனிடம் காணப்பட்ட குணாதிசயம்: *யோவான்ஸ்நானன் தன்னைத் தானே தாழ்த்தி, இயேசுவை உயர்த்தினார். தன்னையே உயர்த்திக்கொள்ள அவர் ஆசைப்பட்டது கிடையாது.*

## யோவான்ஸ்நானனின் ஏழாவது பண்பு

நவீன காலப் பிரசங்கிமார்கள் தாங்கள் யாரையும் புண்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத் தெளிவில்லாத முறையில் பேசுகிறார்கள். ‘‘எது சரியானதோ அதைச் செய்யுங்கள்’’ என்று பிரசங்கிப்பது எளிதான காரியம்தானே? இப்படிப்பட்ட போதனைக்குப் பொய்யான கிறிஸ்தவர்களும் மெய்யான கிறிஸ்தவர்களும் ‘‘ஆமாம்’’ என்றுதான் பதிலளிப்பார்கள். பல பிரசங்கிமார்கள் உலகத்தில் காணப்படும் பல மோசமான பாவங்களைக் குறித்து விவரிக்கிறார்கள், சபைக்குள்ளும் இப்படிப்பட்ட பாவங்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுவதில்லை. அவர்கள் ஆபாச இலக்கியங்களைக் குறித்துக் கொந்தளித்தாலும், தனது சபை உறுப்பினர்கள் ஆபாச கேசட்டுகளை வாங்குவதைக் குறித்து ஒன்றும் சொல்லுவதில்லை. மனுஷரைக் குறித்த பயம் அவர்களைக் கண்ணியில் சிக்க வைத்திருக்கிறது.

ஆனால் யோவான்ஸ்நானனோ *திட்டவட்டமாகப்* பிரசங்கிக்கத் தயங்கவில்லை. லூக்கா இப்படி அறிவிக்கிறார்:

> அப்பொழுது ஜனங்கள் அவனை நோக்கி: அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று

> கேட்டார்கள். அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான். ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெற வந்து, அவனை நோக்கி: போதகரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள் என்றான். போர்ச்சேவகரும் அவனை நோக்கி: நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய்க் குற்றஞ் ாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள் என்றான் [லூக்கா 3:10—14].

யோவான்ஸ்நானன் திட்டவட்டமாகக் கொடுத்த ஆலோசனைகளில் ஆறில் ஐந்து பணத்தையோ அல்லது பொருட்களையோ குறித்தது என்பது சுவாரசியமாக இருக்கிறது. பொன்னான விதியோடும் இரண்டாவது பிரதான கற்பனையோடும் தொடர்புடைய உக்கிராணத்துவத்தைக் குறித்துப் பேச அவர் பயப்படவில்லை. இப்படிப்பட்ட ''பாரமான'' கருத்துக்களைச் சொல்லுவதற்குப் புதிதாக மனமாற்றம் அடைந்தவர்கள் பல ஆண்டுகள் அனுபவம் பெறுவதற்காகவும் அவர் காத்திருக்கவில்லை. தேவனுக்கும் பணத்துக்கும் ஒரே வேளையில் ஊழியம்செய்ய முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். அதனால் உக்கிராணத்துவம் துவக்கத்திலிருந்தே முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

இது மற்றொரு கருத்துக்கு நம்மை இட்டுச் செல்லுகிறது. அவர் தொடர்ந்து சிறிய காரியங்களைப் பெரிதுபடுத்திச் சொல்லவில்லை. ஆடைகளைக்குறித்தும், வெளியரங்கமான தோற்றத்தைக் குறித்தும் அவர் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கவில்லை. ''நியாயப் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளின்மீதே'' அவர் கவனம் செலுத்தினார் [மத். 23:23]. நம்மைப்போலப் பிறனிடத்தில் அன்புகூருவதும், நாம் எப்படி நடத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறோமோ அப்படியே மற்றவர்களை நடத்துவதும் மிகவும் முக்கியமான காரியங்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அதாவது அடிப்படைத் தேவைகளில் குறைவுபடுபவர்களோடு உணவையும், ஆடையையும் பகிர்ந்துகொள்ள வேண்டும், மற்றவர்களோடு நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும், நம்மிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் இருக்க வேண்டும்.





யோவான்ஸ்நானனிடத்தில் காணப்பட்ட இந்த ஏழாவது பண்பு இயேசுவுக்குப் பிடித்தமானதாக இருந்தது: *அவர் தெளிவில்லாமல் பொதுவாகப் பிரசங்கிக்காமல் தேவனைப் பிரியப்படுத்தும்படி மக்கள் செய்ய வேண்டிய குறிப்பிட்ட காரியங்களை, உக்கிராணத்துவம் உட்பட, குறிப்பிட்டார். மிக முக்கியமானவைகளின்மீது அவர் பார்வையை வைத்திருந்தார்.*

## முடிவுரை

யோவான்ஸ்நானன் போதித்தவைகளைவிட ஒரு போதகர் அல்லது உபதேசியாரின் ஊழியத்தில் இன்னும் பரவலான கருப்பொருள்களைக் குறித்துப் போதிக்க வேண்டியிருக்கிறது. யோவான்ஸ்நானன் மனந்திரும்பாதவர்களுக்குப் போதித்தார். போதகர்களும் உபதேசியார்களும் ஏற்கெனவே மனந்திரும்பியவர்களுக்குப் போதிக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுடைய போதனை இயேசுவானவர் தமது சீஷர்களுக்குப் போதித்தவைகளையும், நிருபங்களில் எழுதப்பட்டுள்ளவைகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

என்றாலும், நாம் யாரிடம் பேசுகிறோம் என்பதைச் சரியாகக் கணிக்க அடிக்கடி தவறிவிடுகிறோம். இன்று பெரும்பாலும் பாவிகளைப் பரிசுத்தவான்களாக நினைத்துப் பிரசங்கிக்கிறார்கள். மக்கள் ஒரு சபைக் கட்டிடத்தில் இருக்கிறார்கள் என்பதற்காக, அவர்களுடைய வாழ்க்கை உலகத்தாரின் வாழ்க்கையைவிட வேறுபட்டதாக இல்லாவிட்டாலும், அவர்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுப்பது நமது வேலை அல்ல. இன்று இலட்சக்கணக்கான ''யோவான்ஸ்நானன்கள்'' சபைகளின் பீடங்களிலிருந்து பிரசங்கிப்பது அவசியமாக இருக்கிறது. இந்த அறைகூவலை நீங்கள் ஏற்றுக்கொள்ளுவீர்களா? இயேசுவுக்குப் பிடித்த பிரசங்கியார்களில் ஒருவராக நீங்கள் மாறுவீர்களா?